பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

04 09 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நாட்டின் முன்னேற்றத்திற்கு கல்வியில் மகளிர் மேம்பாடு அடைய வேண்டியது அவசியம் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
2. பாதுகாப்புத் துறையை மேம்படுத்துவதற்காக ஒரு லட்சத்து 45 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பாதுகாப்பு தளவாட கொள்முதலுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
3. மேற்குவங்கத்தில் மகளிர் மற்றும் குழந்தைகைளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதா அம்மாநில சட்டப்பேரவையில் நேற்று நிறைவேறியது.
4. உக்ரைனின் **Poltava** நகரில் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 51 பேர் உயிரிழந்தனர்.
5. பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் பதக்கங்களை வென்ற வீரர் வீராங்கனைகளுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாட்டின் முன்னேற்றத்தில் மகளிர் சமூக பொருளாதாரம் மற்றும் கல்வியில் மேம்பாடு அடைய வேண்டியது அவசியம் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

மும்பையில் நேற்று மகாராஷ்டிரா மாநில சட்ட மேலவையின் நூற்றாண்டு கொண்டாட்டங்களில் பங்கேற்று அவர் பேசினார்,

அனைத்து துறைகளிலும் மகளிரின் பங்களிப்பு இருந்தால் மட்டுமே நாடு முன்னேற்றம் அடையும் என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

மூன்று நாள் பயணமாக மகாராஷ்டிரா சென்றுள்ள குடியரசுத் தலைவர் இன்று லத்தூர் மாவட்டம் உத்கிர் என்ற இடத்தில் புத்தவிஹாரை தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு ஏக் நாத் ஷிண்டே, மத்திய அமைச்சர் திரு ராம்தாஸ் அத்வாலே உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இதைத் தொடர்ந்து மத்திய அரசின் நலத்திட்டங்களில் பயனடைந்த மகளிர் பயனாளிகளை திருமதி திரௌபதி முர்மு சந்தித்து கலந்துரையாடுகிறார்.

[]<<<>>>[]

ப்ரூனே சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று அந்நாட்டு மன்னர் Sultan Haji Hassanal Bolkiah சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இந்த சந்திப்பின்போது பாதுகாப்பு, வர்த்தகம் முதலீடு, எரிசக்தி, விண்வெளி தொழில்நுட்பம், சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்த கூட்டுப் பணிக்குழுவை அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்று வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

நீண்டகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் ப்ரூனேயிலிருந்து ஹைட்ரோ கார்பன் இயற்கை வாயு இறக்குமதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ப்ரூனேயில் தமது பயணத்தை முடித்துக் கொண்டு திரு நரேந்திரமோடி சிங்கப்பூர் செல்கிறார்.

அந்நாட்டு பிரதமர் திரு லாரன்ஸ் வாங் உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் பலனளிக்கக்கூடிய வகையில் இந்த பேச்சுக்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[]<<<>>>[]

நாட்டின் பாதுகாப்பு ஆயத்த நிலையை மேம்படுத்தும் வகையில் ஒரு லட்சத்து 45 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் கூட்டத்தில் பத்து முக்கிய கொள்முதல் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விமான தீ தடுப்பு ரேடார்கள், டோர்மியர் 228-ரக விமானம், அடுத்த தலைமுறைக்கான அதிவேக கண்காணிப்பு கப்பல்கள், போர் விமானங்கள் உள்ளிட்டவை இந்த கொள்முதலில் அடங்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 35 முதல் 45 ஆண்டுகளுக்கு செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு முன் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறைகளில் கடந்த பத்து ஆண்டுகளில் இரண்டரை மடங்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று இந்த துறை மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சகத்தின் முதலீட்டு செலவினம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்.

நடப்பு ஆண்டில் பாரத் நெட் திட்டம், நான்கு-ஜி மொபைல் உள்நாட்டு தொழில்நுட்ப திட்டங்கள் உள்ளிட்ட பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி தொடர்பாக துறை அதிகாரிகளுடன் அவர் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

**[]<<<>>>[]**

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா முன்னிலையில் திரிபுரா மாநில அரசு தேசிய விடுதலை முன்னணி, அனைத்து திரிபுரா புலிகள் படை இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

திரிபுரா முதலமைச்சர் திரு மாணிக் சாகா மற்றும் உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

வடகிழக்கு மாநிலங்களில் பிரிவினைவாதம் மற்றும் வன்முறை சம்பவங்களை முற்றிலுமாக ஒழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இதுவரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பிரிவினைவாதிகள் ஆயுதங்களை கைவிட்டு அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

மேற்குவங்கத்தில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுக்க வகை செய்யும் அபராஜிதா சட்டத்திருத்த மசோதா அம்மாநில சட்டப்பேரவையில் நேற்று குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

இந்த மசோதா ஆளுநரின் ஒப்புதலுக்குப் பின்னர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

கொல்கத்தா அரசு மருத்துவமனையில் பெண் பயிற்சி மருத்துவர் கடந்த மாதம் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட கொலை செய்யப்பட்ட நிலையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுபோன்ற பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை விதிக்க இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இலங்கையில் விவசாயிகள் பெற்ற அனைத்து பயிர்க்கடன்களும் உடனடியாக ரத்து செய்யப்படுவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இலங்கையின் பல்வேறு விவசாய சங்கங்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று இந்த கடன்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதாக அந்நாட்டு அதிபரின் ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

இதன்மூலம் விவசாயிகளுக்கு நிதிச்சுமையிலிருந்து நிவாரணம் கிடைப்பதுடன், அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கடந்த ஆண்டு இலங்கையின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் அதிகரித்து பொருளாதார நிலைமை மேம்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இலங்கையில் முப்படைகளில் பணியாற்றி வரும் அனைவருக்கும் அடுத்த ஜனவரி மாதம் முதல் ஊதிய உயர்வு வழங்கப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அரசு துறைகளில் பணியாற்றும் கீழ்நிலை ஊழியர்களுக்கு 24 சதவீதமும், உயர் பதவி வகிப்பவர்களுக்கு அதிகபட்சமாக 50 சதவீதமும் அடிப்படை ஊதிய உயர்வு வழங்க ஏற்கனவே இலங்கை அரசு உத்தரவிட்டிருந்தது.

இலங்கை அதிபருக்கான நிபுணர் குழுவின் தலைவர் திரு உதயா சேனவி ரத்னே அமைச்சரவைக்குழு அளித்த பரிந்துரையை நேற்று வெளியிட்டார்.

அதன்படி இந்த ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

உக்ரைனின் **Poltava** நேகரில் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 51 பேர் உயிரிழந்தனர். 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலில் ராணுவ தொலைத் தொடர்பு கட்டிடம் மற்றும் அருகில் உள்ள மருத்துவமனை சேதமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களில் ராணுவத்தினரும் அடங்குவர் என்று உன்ரைன் அரசு வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

எச்சரிக்கை மணி ஒலித்த நிலையில் ராணுவத்தினர் பதிலடி தாக்குதல் நடத்த போதிய அவகாசம் கிடைக்கவில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா-வின் இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என உக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே கணக்கு தணிக்கை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கணக்கு தணிக்கை துறையின் தலைவர் மற்றும் இந்திய தலைமை கணக்கு தணிக்கையாளர் திரு கிரிஸ் சந்திர முர்மு இடையே நேற்று புதுதில்லியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இரு நாடுகளுக்கும் இடையே கணக்கு தணிக்கை தொடர்பான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்டிருப்பதாக திரு கிரிஸ் சந்திர முர்மு தெரிவித்துள்ளார்.

அறிவுசார் தகவல்களை பரிமாறிக் கொள்ளுதல், நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல் போன்றவற்றுக்கும் இந்த ஒப்பந்தம் வகை செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

குஜராத், கொங்கன் மற்றும் கோவா பகுதிகள், மத்திய பிரதேசம், சௌராஷ்டிரா மற்றும் கட்சி பகுதிகள், சத்திஷ்கர் மாநிலங்களில் இன்று கன முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடதமிழக மாவட்டங்கள், ராயலசீமா, ராஜஸ்தான், தெலங்கானா, தெற்கு ஹரியானா உள்ளிட்ட பகுதிகளிலும் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அது கூறியுள்ளது.

இதனிடையே தலைநகர் தில்லியில் நேற்று இரவு கனமழை பெய்தது. தொடர்ந்து இன்றும் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் நாளை காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுவையில் பல்வேறு பகுதிகளில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் நேற்று மட்டும் இந்தியாவுக்கு இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்கள் என ஐந்து பதக்கங்களில் கிடைத்துள்ளன.

ஆடவர் உயரம் தாண்டுதலில் சரத்குமார் வெள்ளிப்பதக்கமும், மாரியப்பன் தங்கவேலு வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

மாரியப்பன் தங்கவேலு ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆடவர் ஈட்டி எறிதலில் அஜித்சிங் வெள்ளிப்பதக்கமும், சுந்தர் குர்ஜால் வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

மகளிர் 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் தீப்தி ஜீவன்ஜி வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை மூன்று தங்கம், எட்டு வெள்ளி, ஒன்பது வெண்கலம் என மொத்தம் 20 பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 19-வது இடத்தில் உள்ளது.

பாரதாலிம்பிக்கில் பதக்கங்கள் வென்ற வீரர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரெளபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதனிடையே பதக்கம் வென்ற வீரர் வீராங்கனைகளுடன் திரு நரேந்திரமோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்திய தடகள வீரர்களை நினைத்து நாடு பெருமை அடைவதாக குறிப்பிட்டுள்ளார்.

டோக்கியோ பாராலிம்பிக்கில் இந்தியா 19 பதக்கங்களை பெற்றிருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கையை இந்தியா தாண்டி சாதனை படைத்திருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அவர்களுடைய சாதனை அளப்பரியது என்றும், இது இந்தியாவுக்கு பெருமை அளிப்பதாகவும் பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

***End of News***